விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 145 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 30 வெள்ளிக்கிழமை (13.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



# பிரதமரானார் ரணில்



- பொருளாதாரத்தை நிச்சயம் கட்டியெழுப்புவேன்.
- எரிபொருள் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்படும்.
- பெரும்பான்மையை பாராளுமன்ற அமர்வில் காணலாம்.
- கோட்டா கோ கம போராட்டம் தொடரலாம்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டாவின் தீர்மானம் தவறு

### சுமந்திரன் அதிருப்தி

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்த அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவின் தீர்மானம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடும் 15

## புதிய பிரதமருக்கு முன்னாள் பிரதமர் வாழ்த்து தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய பிரதமராக நேற்று பதவியேற்றுக்கொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்தினை தெரிவித்துள்ளார்.

மகிந்த தன்னுடைய டுவிட்டர் வலைத் தளத் 15

## ஊரடங்குச் சட்டம்

### 6 மணிக்கு தளர்த்தப்பட்டு
### 2 மணிக்கு மீண்டும் அமுல்

(கொழும்பு)

அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6.00 மணிக்கு தளர்த்தப்பட்டு, மீண்டும் பி.ப 2.00 மணிக்கு அமுல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பி.ப 02.00 மணிக்கு அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம், மறுநாள் சனிக்கிழமை காலை 6.00 மணி வரை அமுலில் இருக்கும். 15

## சவாலான பணியை பொறுப்பேற்ற ரணிலுடன் இணைந்து செயற்படத் தயார்

### ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு



(கொழும்பு)

உறுதியான இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமரின் வாழ்த்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடு மிகவும் கொந்தளிப்பான தருணத்தில் இருக்கும் நிலையில் மிகவும் சவாலான பணியை பொறுப்பேற்பதற்கு முன்வந்து பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள ரணில் 15

## ரணிலுடன் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பு

### வாழ்த்துச் செய்தியில் அமெரிக்கத் தூதுவர்




(கொழும்பு)

புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம் என அமெரிக்கத் தூது 15

## மிருசுவிலில் பாம்புக் கடிக்கு இலக்கான பெண் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி - மிருசுவில் பகுதியில் நாக பாம்புக் கடிக்கு இலக்கான குடும்பப்பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புதன் கிழமை இரவு பாம்புக்கடிக்கு 15

### ரணில் அமைச்சரவையில்

## ஐக்கிய மக்கள் சக்தியினர் இடம்பெறமாட்டார்கள்

### ரஞ்சித் மத்தும பண்டார

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றுள்ள நிலையில் நியமிக்கப்படும் அமைச்சரவையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெறமாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் தமக்கு நம்பிக்கை உள்ளதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் 15

## அமைச்சரவையில் இணைய விரும்பின் உடன் அறிவிக்குக

### சஜித்துக்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)

புதிய அமைச்சரவையில் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எவரேனும் இணைந்து கொள்ள வேண்டுமாயின் உடனடியாக அறிவிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஜனாதிபதி கோட்டா அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

4 நிபந்தனைகளுக்கமைய, ஐக்கிய மக்கள் சக்தி முதன்மையாகக்கொண்ட அனைத்துக் கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணியின் கீழ் 15

## மகிந்த, நாமல், ஜோன்ஸ்டன் உட்பட 17 பேர் வெளிநாடு செல்ல தடை



### கோட்டை நீதிமன்றம் அதிரடி உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட 17 பேருக்கு வெளிநாடு செல்ல தடை விதித்து கோட்டை நீதவான் உத்தரவிட் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் திருடிய மோ.சைக்கிளில் 5 இடங்களில் சங்கிலி அறுப்பு

## இரண்டு சந்தேக நபர்கள் கைது; ஹெரோயினும் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் திருடிய மோட்டர் சைக்கிளில் சென்று 5 இடங்களில் சங்கிலி அறுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் அதிரடியாக செயற்பட்டு ஹெரோயினுடன் இரு இளைஞர்களை கைது செய்துள்ளதுடன் அறுக்கப்பட்ட சங்கிலிகளையும் மீட்டுள்ளனர்.

குறித்த இரு இளைஞர்களும் மகாறம்பைக்குளம் பகுதியில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா இரண்டாம் குறுக்குத் தெரு பகுதியில் அண்மையில் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்பின்னர் சில நாட்களில் திருநாவற்குளம், வைரவபுளியங்குளம், யாழ் வீதி, பூந்தோட்டம் சந்தி, அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் வீதியால் சென்ற மற்றும் தனிமையில் நின்ற பெண்களைப் பின் தொடர்ந்தும் அவர்களிடம் முகவரி விசாரிப்பது போன்று விசாரித்து அவர்கள் அணிந்திருந்த சங்கிலிகள் அறுத்துச் செல்லப்பட்டதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் தனித்தனி முறைப்பாடுகள் கடந்த ஒரு மாதத்திற்குள் கிடைக்கப்பெற்றிருந்தன.

6 இடங்களில் இருந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக வவுனியா பொலிஸ் குழுவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது மகாறம்பைக்குளம் பகுதியில் 2 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மோட்டார் சைக்கிள் திருட்டு மற்றும் 5 இடங்களில் இடம்பெற்ற சங்கிலி அறுப்பு சம்பவங்கள் உள்ளிட்ட 6 திருட்டு சம்பவங்களுடன் தொடர்பு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் இருந்து 2 கிராம் ஹெரோயின், அறுக்கப்பட்ட 5 சங்கிலிகள், திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பன மீட்கப்பட்டுள்ளன. (ம-250)

# மன்னார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பதற்றம்

## பொலிஸார் குவிப்பு




இலங்கை முழுவதும் நேற்று வியாழக்கிழமை மதியம் 2 மணிதொடக்கம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணி வரை ஊரடங்கு அறிவிக்கப்பட்ட நிலையில் மன்னார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்கு திடீர் என மக்கள் கூடியமையால் பதற்றமான சூழல் எற்பட்டது.

நேற்று மாலை ஊரடங்கு காலப்பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அவசர சேவைகளுக்கு என எரிபொருள் விநியோகம் இடம் பெற்ற நிலையில் காலை முழுவதும் காத்திருந்து எரிபொருள் கிடைக்காதவர்கள் மாலை நேரம் எரிபொருள் பெற முயன்ற நிலையில் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் மற்றும் பொது மக்களுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

சாதாரண நேரங்களில் எரிபொருள் நிரப்ப சென்றால் எரிபொருள் இல்லை இல்லை என எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் தெரிவிப்பதாகவும் நள்ளிரவு நேரங்களில் சில தனியார்களுக்கு அதிகவிலையிலும் அதிக அளவிலும் எரிபொருட்களை வழங்குவதாகவும் கூறிமக்கள் முரண்பட்டனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் பொது மக்களுடன் கலந்துரையாடி மக்களை கலைந்து செல்லுமாறு எச்சரித்த நிலையில் எரிபொருள் நிரப்ப வருகை தந்த அனைவரும் கலைந்து சென்றனர். (ம-285)

# மயிலங்கூடலூர் நடராஜன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் மூத்த எழுத்தாளர், தமிழ் அறிஞர் மயிலங்கூடலூர் பி.நடராஜன் நேற்று காலமானார்.

பத்திரிகை துறையிலும் குழந்தை இலக்கிய ஆய்விலும் மிக நீண்ட ஈடுபாடு கொண்ட இவர் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் மேலாளராகவும் பணியாற்றியவர்.

இளவாலை மயிலங்கூடலை பிறப்பிடமாகக் கொண்ட இவரின் இறுதிக் கிரியைகள் இன்று நாயன்மார்கட்டில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும். (ம)

### வன்முறை தொடர்பில் அறிவிக்க

# விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

எந்தவொரு பகுதியிலும் வன்முறைச் செயற்பாடுகள் இடம் பெற்றால் அது தொடர்பில் தகவல் தெரிவிக்க புதிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, 076 739 3977 மற்றும் 011 244 1146 ஆகிய இலக்கங்களுக்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் தகவல் வழங்க முடியும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், 118 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கும் வன்முறைச் செயற்பாடுகள் தொடர்பில் அறிவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு கருதியும் வன்முறையாளர்களை அடையாளம் காண்பதற்காகவும் இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

# மரண அறிவித்தல்



## கெவின்ஸ் லெபோன்

தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் Level -5

NCED (Draughtsman) 2k19 College of Technology

மல்வத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கெவின்ஸ் லெபோன் கடந்த (10.05.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மகாதேவன் - மன்றோ (முன்பள்ளி ஆசிரியர்) தம்பதியினரின் அன்பு மகனும் புனிதமலர் காலஞ்சென்ற அமிர்தநாயகம் தம்பதியினரின் அன்புப் பேரனும் சாளின் வேஜினி (யாழ். பல்கலைக்கழகம்), மேளின் பேளினி (சப்ரகமுவ பல்கலைக்கழகம்), கெவின்ஸ் லியோன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிறின்சி, வவி, ஜக்குலின் (ஆசிரியர் - பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் சீபஸ், குட்டி, நிஷாந்தி(மானிப்பாய் மகளிர் கல்லூரி), மனோராணி, இராக்கினிஅம்மா, கத்தோலிக்கம், தானேஸ்வரி அகியோரின் மருமகனும் றூபி, தாவீது (போதகர்), சாள்ஸ்(பிரான்ஸ்), மன்மதன், சேகர், அன்ரன் ஆகியோரின் பெறாமகனும் லிசா, மெல்வின், மெல்சிகா, ஜனோஷ், ஜோனிஷ்கா, அபிஷன், அபிக்னா, அக்னாஷ், அனெக்ஸ் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றல் திருப்பலி இன்று (13.05.2022) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மல்வம்,
உடுவில்.

077 173 8611
077 640 7658

குடும்பத்தினர்

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தசாமி இரத்தினம்

மலர்வு 17.06.1924 | உதிர்வு 24.04.2021

தாய் என்னும் தீபம் அணைந்து
ஆண்டுகள் ஒன்றாகிவிட்டபோதும்
பாசம் என்னும் ஒளியால் எம்மை வாழ
வழிகாட்டிக் கொண்டிருக்கும்
எங்கள் அம்மாவே அம்மம்மாவே
திரும்பி வர முடியாத தூரத்திற்கு
நீங்கள் போய்விட்டபோதும்...
என்றும் எம் மனதில்
நிலைத்திருப்பீர்கள் நீங்கள் காட்டிய
வழியே நாம் வாழ்வோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
மணியர்பதி முருகனை
வேண்டுகின்றோம்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.


(11352)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களுக்கு இந்தியா தஞ்சம் வழங்கக் கூடாது

## சீமான் வலியுறுத்து



**(சென்னை)**

**ராஜபக்ஷ சகோதரர்களுக்கு இந்தியா எக் காரணம் கொண்டும் அரசியல் அடைக்கலம் வழங்கக் கூடாது என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.**

நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பதாவது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் புரட்சி வெடித்துள்ளதை அடுத்து, இனப்படுகொலையாளிகளான ராஜபக்ஷ சகோதரர் உட்பட அந்நாட்டின் ஆட்சியாளர்கள் ஓட ஓட விரட்டப்பட்டு வருகின்றனர்.

அவர்களின் வீடுகள் உட்பட உடமைகள் தீயிட்டு கொளுத்தப்படும் காட்சிகள் நாள் தோறும் வெளியாகி வருகின்றன . சிங்கள இனவாதமும், பௌத்த மதவாதமும் இணைந்து தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை மறுத்து, அதன் விடுதலையை தகர்த்து, அதற்காக போராடிய மக்களை இனப்படுகொலை செய்து அழித்தொழித்தது.

மக்களின் நலனில் அக்கறை செலுத்தாமல், மத, இன வெறியை மக்களுக்கு ஊட்டி, தமிழர்கள் மீதான வன்மத்தை வளர்த்து, அதன் மூலம் மாறி மாறி அரசாண்ட சிங்கள் கொடுங்கோன்மை ஆட்சியாளர்களே இன்று இலங்கையில் நடக்கும் அத்தனை துயரங்களுக்கும் மூல காரணம்.

அதற்கு துணைபோன சிங்கள மக்கள் ஐம்பதாண்டுகள் தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகளை, பொருளாதார நெருக்கடிகளை இன்றைக்கு அனுபவித்து வருகின்றனர் என சீமான் தனது அறிக்கையில் தெரிவித்தார். (நி)

## கோட்டாவை பதவி விலகுமாறு வலியுறுத்தி இன்று பாரிய தொழிற்சங்கப் போராட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக மற்றுமொரு பாரிய தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து நாடு தழுவிய தொழிற் சங்கபோராட்டம் நேற்று முன்தினம் கைவிடப்பட்டதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நேரத்தை வீணடிக்காமல் உடனடியாக பதவியை இராஜினாமா செய்யுமாறு சமரசிங்க ஜனாதிபதியிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

நாட்டின் மறுசீரமைப்புச் செயற்பாடுகளைத் தொடங்குவதற்கு இந்நாட்டில் உள்ள பல அரசியல் இயக்கங்கள் தமது வேலைத்திட்டங்களை முன்வைத்துள்ளன.

எனவே , இன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக மாபெரும் தொழிற்சங்கப் போராட்டமொன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது பதவியை இராஜினாமா செய்து மௌனமாக இருக்காவிட்டால் இந்த பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை பாரிய மக்கள் போராட்டமாக மாற்றுவோம் எனவும் சமரசிங்க எச்சரித்துள்ளார். (நி)

## மலேசியாவுக்கு தப்பியோடிய பிள்ளையான்

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) படகில் மலேசியாவுக்கு தப்பிச் சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அங்கிருந்து ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு தப்பிச் செல்வதற்கு முயற்சிப்பதாகவும் அதற்கான வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரன சூழ்நிலையில், பிள்ளையான் திடீர் என நாட்டைவிட்டு வெளியேறியுள்ளமை பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

இருப்பினும் இது தொடர்பில் உத்தியோகபூர்வமான தகவல்கள் எவையும் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

(வோஷிங்டன்)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது.

அதற்கமைய, ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்யின்வி லை 105.5 டொலராக அதிகரித்துள்ளது. (நி)

## டொலர் ஒன்றின் விற்பனை விலை 380 ரூபாவாக பதிவு

(கொழும்பு)

இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் அமெரிக்க டொலரின் விற்பனை விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அதன்படி, இலங்கையில் பல உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை நேற்று (வியாழக்கிழமை) 380 ரூபாவாக பதிவாகியுள்ளது. (நி)

## மிகக் குறைந்தளவு டீசல் கையிருப்பில்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது குறைந்த அளவிலான டீசல் மட்டுமே உள்ளது என இலங்கை பெற்றோலிய தனியார் பவுசர் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் டீசல் தட்டுப்பாடு நிலவுவதாக குறித்த சங்கத்தின் இணைச் செயலர் டி.வி.சாந்த சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம், அத்தியாவசிய சேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வரையறுக்கப்பட்ட டீசல் கையிருப்பு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொலொனாவ மற்றும் முத்துராஜவெல சேமிப்பு முனையங்களில் அடுத்த இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு போதுமான பெற்றோல் உள்ளதாக அவர் தெரிவித்தார். (நி)

## ராஜபக்ஷக்களின் உணவு விடுதியும் தீக்கிரை

(கொழும்பு)

தங்காலை மெடில்ல பிரதேசத்தில் ராஜபக்ஷக்களுக்கு சொந்தமானதாகக் கூறப்படும் உணவகத்துக்கும் ஒரு குழுவினர் தீ வைத்துள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தீ விபத்தில் உணவகத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை அரசாங்க ஆதரவு தரப்பினர்கள் ஏற்படுத்திய குழப்பம் வன்முறையாக மாறியது.

அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்களின் வீடுகள், வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

அந்த வகையில், தங்காலை பெலியத்த வீதியிலுள்ள கார்ல்டன் கட்டடம் தீ வைத்து எரிக்கப்பட்டதுடன், தங்காலை மெடில்ல பிரதேசத்தில் உள்ள ராஜபக்ஷக்களுக்குச் சொந்தமான உணவகத்துக்கும் தீ வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## அரச பொது நிர்வாக செயலராக ரத்னசிறி நியமனம்

(கொழும்பு)

அரச பொது நிர்வாக செயலாளராக ஜே.ஜே. ரத்னசிறி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய, மக்களின் இயல்பு வாழ்க்கையை தொடர்ந்து பேணுவதற்கு கடந்த 10 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பொது நிர்வாகம்; உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய ஜே.ஜே. ரத்னசிறி, மீண்டும் அதே அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிட்செல் மார்ஷின் அதிரடியான துடுப்பாட்டத்தால்
# ராஜஸ்தான் அணியை வீழ்த்தியது டெல்லி அணி



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 58 ஆவது லீக் போட்டியில், டெல்லி கெபிடல்ஸ் அணி 8 விக்கெட்டு களால் வெற்றிபெற்று ள்ளது.

மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், டெல்லி கெபிடல்ஸ் அணியும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி கெபிடல்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 160 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அஸ்வின் 50 ஓட்டங்களையும் படிக்கல் 48 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

டெல்லி கெபிடல்ஸ் அணியின் பந்துவீச்சில், சேட்டன் சக்கரியா, நோட்ஜே மற்றும் மிட்செல் மார்ஷ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 161 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய டெல்லி கெபிடல்ஸ் அணி, 18.1 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால், டெல்லி கெபிடல்ஸ் அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மிட்செல் மார்ஷ் 89 ஓட்டங்களையும் டேவிட் வோர்னர் ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பந்துவீச்சில், ட்ரெண்ட் போல்ட் மற்றும் யுவேந்திர சஹால் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சில் 2 விக்கெட்டுகளையும் 62 பந்துகளில் 7 சிக்ஸர்கள் 5 பவுண்ரிகள் அடங்கலாக 89 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்ட மிட்செல் மார்ஷ் தெரிவு செய்யப்பட்டார். (6)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2614

### அபிஷேக்




### கயல்




### லவன்




### தயாளினி




### ஜெனா

அதர்மத்தின் ஆட்டம்
எல்லாம்
சில நாளே
தாக்குப்பிடிக்கும்
உண்மை ஒருநாள்
பூகம்பம் போல
வெடிக்கும்.

### ஆரவ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திரசிகிச்சைக்கான ஒரு தொகுதி மருந்துகள் சிவபூமி அறக்கட்டளையால் கையளிப்பு

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சத்திர சிகிச்சைக்கான மயக்க மருந்துப் பற்றாக்குறையை அறிந்து சிவ பூமி அறக்கட்டளையினால் ஒரு தொகுதி மருந்துகள் அன்ப ளிப்பாக வழங்கப்பட்டன.

நேற்று வியாழக்கிழமை யாழ். போதனா மருத்து வமனைப் பணிப்பாளர் மரு த்துவர் கே.நந்தகுமாரன், பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா ஆகி யோர் சிவபூமி அறக்க ட்டளையின் தலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனிடமிருந்து குறித்த மருந்துகளைப் பெற் றுக் கொண்டனர். (நி-18)



# 12 தமிழக மீனவர்கள் பிணையில் விடுவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி - இரணைதீவு கடற்பரப்பில் கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற் றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்கள் பிணையில் விடுவிக்கப்பட் டனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று கிளிநொச்சி மாவ ட்ட நீதிவான் நீதிமன் றில் எடுத்துக் கொள்ளப்பட் டது

அனுமதிப்பத்திரம் இன்றி இலங்கை கடற்பரப்புக்குள் பிர வேசித்தமை, இழுவை மடி வலைகளை உடைமையில் வைத்திருந்தமை, இழுவை மடி வலைகளை பயன்படுத்தி தொழில் மேற்கொண்டது ஆகிய மூன்று குற்றச்சாட்டு க்கள் சுமத்தப்பட்டிருந்தன.

குறித்த குற்றச்சாட்டுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருடகால சிறை தண்ட னையை விதித்து விடுதலை செய்தார். (நி-6-315-316)

# கோட்டா கோ கம போராட்டத்தில் நினைவுச் சின்னம் திறப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நாடளாவிய ரீதியில் அரச எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

இந்நிலையில் காலிமுகத்திடல் மற் றும் ஜனாதிபதி செயலகம் முன்னால் நடைபெற்றுவரும் தன்னெழுச்சி ஆர்ப் பாட்டம் நேற்று 35 ஆவது நாளை எட்டி யுள்ளது.

இதேவேளை கடந்த சில தினங்க ளுக்கு முன்னர் காலிமுகத்திடல் ஆர்ப் பாட்ட களமான கோட்டா கோ கமக்குள் புகுந்த வன்முறையாளர்களால் ஆர்ப் பாட்டக் கூடாரங்கள் அடித்து நொருக்கி தீ வைக்கப்பட்டன.

இவ்வாறான நிலையில் கோட்டா கோ கமவில் இடம்பெற்ற வன்முறைச் சம்ப வத்தை நினைவுபடுத்தும் வகையில் 'போராட்டத்தின் நினைவுச்சின்னம்' ஒன்று நேற்றைய தினம் கோட்டா கோ கம வளாகத்தில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நினைவுச் சின்னத்தில் அரச அடக்குமுறை மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டு சாமானிய மக்களின் தேய்ந்து போன செருப்புகளால் மிதித்தது போல உருவகப்படுத்தப்பட்டதாக குறித்த நினை வுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. (நி)


# கண்ணீர் அஞ்சலி

ஈழத்து இராமேஸ்வரம் என
வழங்கும் புங்குடுதீவு
பாணாவிடைச் சிவன்
தேவஸ்தானத்தின் பிரதம
மஹோற்சவ சிவாச்சாரியார்
பரமசாமிக்குருக்கள்
முத்துக்குமாரசாமிக்
குருக்கள் அவர்களின் பாரியார்

**ஸ்ரீமதி பர்வதவர்த்தினி**



மலர்வு 29.01.1963 (11351) உதிர்வு 11.05.2022

அம்மாவின் மறைவுச் செய்தி
கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளோம்.
அமரரின் ஆத்மா சாந்தியடையவும்
பர்வதபத்தினி உடனுறை
இராமலிங்கேஸ்வரப் பெருமானின்
பாதார விந்தங்களை அடைய
பிரார்த்திப்பதுடன் குருக்கள் ஐயா
குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவித்துக்
கொள்கின்றோம்

ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபை,
புங்குடுதீவு பாணாவிடை
சிவன் தேவஸ்தானம்
புங்குடுதீவு - 07


# இராசிபலன்

13.05.2022
சித்திரை 30, வெள்ளிக்கிழமை
துவாதசி பிற்பகல் 3.03 மணிவரை இராகுகாலம் 10.24-11.54 மணிவரை
அத்தம் பிற்பகல் 4.43 மணிவரை பிரதோஷ விரதம், அமிர்த சித்தம்
சுபநேரம் 5.54-7.24 மணிவரை சந்திராஷ்டமம் - பூரட்டாதி

வளவன்

**மேஷம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவு ரையும் ஆதரவும் கிடை க்கும், குடும்ப மகிழ்ச்சி அதிக ரிக்கும், கௌரவமான நாள்.

**ரிஷபம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டு வீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, வழி பாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கல்யாணக்கனவு நனவாகலாம்.

**மிதுனம்** பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபாரத்தை விரிவுபடு த்தும் எண்ணம் உருவா கும், வருமானம் திருப்தி தரும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கடகம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கனிவா கப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வழி பாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பேச்சில் இனிமை பிறக்கும், எண் ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், சான் றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர் த்தியாகும், வழிபாட் டுச் சிந்தனை மேலோ ங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள்,பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரி யச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீ ர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வரம் தரும் தெய்வங்களை வழிப டச் செல்ல வேண்டிய நாள், சமுதாயத்தில் மேன்மையுண்டு.

**மகரம்** ஏட்டிக்குப் போட்டி யாகச் செயற்பட்டவ ர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்.

**கும்பம்** மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டுக் காரியம் தொடங்க வேண்டிய நாள், வீண் விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**மீனம்** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதி கரிக்கும், ஆன்மீகச் சிந் தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

வாழ்க்கை குறுகியதே ஆனாலும் இனிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம். (வ/து) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தின் 23 கிளைகளுக்கான கிளைக்குழு உறுப்பினர் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் 14.05.2022 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பின்வரும் விபரப்படியாக நடைபெறவுள்ளது

| தொ. இல | கிளை இல | கிளை விபரம் | தவிசாளர் விபரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | 01 | அல்வாய் தெற்கு (A) (மாலிச்சந்தி) | திரு ச.பாலகுமார் | கிளைக்கட்டடம் |
| 02 | 02 | அல்வாய் தெற்கு மத்தி (முத்துமாரியம்மன்) | திரு வே.பிரதீஸ்குமரன் | அறிவு அருள் சனசமூக நிலையம் |
| 03 | 03 | கட்டைவேலி | திரு அ.தயாளன் | யா/ஞானசாரியார் கல்லூரி |
| 04 | 04 | கல்வத்தை | திரு க.செந்துாரன் | யா/நெல்லியடி மெ.மி.த.பாடசாலை |
| 05 | 05 | கணுவில் | திருமதி செ.இந்திரவதனா | வடமராட்சி பிரதேச சபை பாலர் பாடசாலை. நெல்லியடி |
| 06 | 06 | கரவெட்டி மேற்கு - (அந்திரான்) | திரு நா.குமணதாசன் | யா/வதிரி திரு இருதய கல்லூரி |
| 07 | 07 | கரவெட்டி கிழக்கு - (தச்சை ஜங்கரன்) | திரு வி.சிவபாலன் | கிளைக்கட்டடம் |
| 08 | 08 | கோவிற்கடவை | திரு சி.சிறிதரன் | கோவிற்கடவை சன சமூக நிலையம் |
| 09 | 09 | நெல்லியடி | திரு வீ.இரத்தினகாந்தன் | நெல்லியடி சன சமூக நிலைய சன் மார்க்க பாலர் பாடசாலை |
| 10 | 10 | நுகவில் | திரு க.திசாகரன் | கிளைக்கட்டடம் |
| 11 | 11 | சந்திரா | திரு சி.பிரதீபன் | நாமகள் சன சமூக நிலையம் |
| 12 | 12 | சண்டில் | திரு கு.வேனுகோபு | கிளைக்கட்டடம் |
| 13 | 13 | துன்னாலை தெற்கு (குடவத்தை) | திரு அ.சஞ்சயன் | கிளைக்கட்டடம் |
| 14 | 14 | கிளான் | திரு ம.நிசாந்தன் | யா/துன்னாலை தெற்கு அ.த.க பாடசாலை |
| 15 | 15 | வதிரி | திரு க.கமலநாதன் | வடமராட்சி தெற்கு பிரதேசசபை பாலர் பாடசாலை. வதிரி |
| 16 | 16 | யார்க்கரு | திரு க.பரநிருபன் | யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் |
| 17 | 19 | துன்னாலை வடக்கு (A) (வல்லியானந்தம்) | திரு சோ.தங்கேஸ்வரன் | வல்லியானந்தம் சன சமூக நிலையம் |
| 18 | 20 | துன்னாலை வடக்கு (B) (துன்னாலைமத்தி) | திரு இ.தனுசன் | யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் |
| 19 | 21 | அல்வாய் தெற்கு(B) (மனோகரா) | திரு செ.பகீரதன் | மனோகரா பாலர் பாடசாலை |
| 20 | 23 | கிழவித்தோட்டம் | செல்வி சி.மாலினி | கிளைக்கட்டடம் |
| 21 | 24 | இராசகிராமம் | திரு ச.சசீந்திரன் | இராசகிராமம் சன சமூக நிலையம் |
| 22 | 25 | வதிரி வடக்கு (டைமன்) | திரு ச.ரதிகுலன் | வதிரி தமிழ் மன்ற நூலகம் |
| 23 | 30 | அல்லையம்பதி | திருமதி பி.சுகிர்தா | அல்லையம்பதி பாலர் பாடசாலை |

23 கிளைகளுக்கும் கிளைப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கான கூட்ட அழைப்பிதழ் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிளைப் பொதுச்சபை கூட்டத்திற்கு சமூகமளிக்கத் தகைமையுடைய, அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்றும் ஏற்கனவே இருமுறை இக்கிளை பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டமையாலும், சமகால சூழலை கருதியும் அனைவரும் உரிய நேரத்தில் சமூகமளித்து சங்க செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பதில் செயலாளர்,
கட்.நெல்.ப.நோ.கூ.சங்கம்,
கரவெட்டி

(சி-4314)

## முள்ளிவாய்க்கால்
# இனப்படுகொலை நிகழ்வுகள் யாழில் காட்சிப்படுத்தல்



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு கடந்த காலங்களில் தமிழ் ம்க்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவழிப்புகள் தொகுத்து ஆவணமாக்கப்பட்டு தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்னால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் வாரம் ஆரம்பமாகின்ற நிலையில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஆவண வெளியீட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி-6-33-18-104)



நூல் விமர்சகர் அம்பலவாணர் சிறீஸ்கந்தராசா எழுதிய 'தராசு முனைகள்' நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை சனசமூக நிலைய மண்டபத்தில் யாழ்.இலக்கியக் குவியத்தின் அமைப்பாளர் வேலணையூர் தாஸ் தலைமையில் நடைபெற்றது. (படம்-ரவிசாந்)



யாழ்ப்பாணம் - இருபாலை கற்பகப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படம்:சிவசாந்தன்)

# யாழ்.போதனா மருத்துவமனையில் தொலைபேசி திருட்டில் ஈடுபட்டவர் மாட்டினார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நீண்ட காலமாக தொலைபேசிகளைத் திருடி வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து பெறுமதிவாய்ந்த 9 தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். மானிப்பாய் சாவற்கட்டுப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே இவ்வாறு நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.போதனா மருத்துவமனையில் நீண்ட நாட்களாக ஊழியர்கள், நோயாளிகளின் தொலைபேசிகளை கதைத்துவிட்டுத் தருவதாக தெரிவித்துவிட்டு அபகரித்துச் செல்வது, நோயாளிகள் மலசல கூடங்களுக்கு செல்லும் போது தொலைபேசிகள் திருடப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றன.

அவை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டதையடுத்து யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட விசாரணையிலேயே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார. (நி-6-33-104)

# 'அவதாரம்' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஜெயசுதனின் 'அவதாரம்' சிறுகதை நூலின் அறிமுக நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்க அரங்கில் இடம் பெறவுள்ளது. (நி-6)


# சர்வதேச தாதியர் தினம் அனுஷ்டிப்பு



சர்வதேச தாதியர் தின நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சிறப்பாக நடைபெற்றது. உலகில் முதலாவது தாதிய பெண்மணி நைட்டிங்கேல் அம்மையாரை நினைவு கூர்ந்த தாதியர்கள் விளக்குகளை ஏந்தி சத்தியப்பிரமாணமும் செய்து கொண்டனர். குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தன் உள்ளிட்ட தாதிய சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (நி-6-315-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரத்தின் முதலாம் நாள் நினைவு அஞ்சலி. யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி வளாகத்தில் நேற்று ஆத்மார்த்தமாக பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

அக வணக்கத்துடன் ஆரம்பமாகிய நினைவேந்தலைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர் சங்க பிரதிநிதிகளால் மலரஞ்சலி செலுத்தப்பட்டதோடு ஈகச் சுடரும் ஏற்றப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இன அழிப்பின் இறுதி நாட்களை முன்னிட்டு இவ்வாரம் இன அழிப்பு வாரமாக நினைவேந்தல்கள் வடகிழக்கு தமிழர் தாயகமெங்கும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாரத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தாலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி மற்றும் நினைவேந்தலை தமிழர் தாயகம் இதய பூர்வமாக கடைப்பிடிக்க வேண்டும் என பல்கலைக்கழக மாணவ சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. (நி-33)

## ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை 17 ஆம் திகதி பாராளுமன்றில் விவாதம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இம் மாதம்17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களின் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதனையடுத்தே, திட்டமிட்டபடி மே 17 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வுகள் கூட்டப்படும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து விவாதிக்க பாராளுமன்றத்தை கூட்ட வேண்டியதன் அவசியத்தை கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியதையடுத்து, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இதன்போதே பாராளுமன்ற உறுப்பினர்களின் விசேட அனுமதியுடன் ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இம் மாதம் 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)

## வன்முறையாளர்களை கைது செய்யக்கோரி ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



(மட்டக்களப்பு)

ஏறாவூர் ஆடைத்தொழிற்சாலைகள் வன்முறைக் கும்பலால் கடந்த செவ்வாய்க் கிழமை தாக்கி சேதமாக்கப்பட்டன.

அங்கிருந்த அதி நவீன ஆடைத்தொழில் இயந்திரங்கள், மின் பிறப்பாக்கிகள், ஜன்னல் கண்ணாடிகள் உட்பட ஏனைய உபகரணங்களும் அடித்து நொறுக்கப்பட்டன.

வன்முறையாளர்களை கைது செய்யக்கோரி அங்கு நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (நி)

## பொதுக்கூட்டம் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

அரச சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு சங்க 18/255 இன் 13 ஆவது பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: 14 ½ சூரி 6 செவ் 5 இல்
உயரம்: 167 cm
தகைமை/தொழில்:BSc,PGDE ஆசிரியர்
எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: B/12641

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம் : ரேவதி 1
கி.பா: 20 சூரி 12 செவ் 4 இல்
உயரம்: 5' 5"
தகைமை/தொழில்:பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரச,தனியார் உத்தியோகம்
தொ.இ: B/12642

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா: 18 ¾ சூரி, செவ் 5 இல்
உயரம்: 5' 10"
தகைமை/தொழில்: Electrician in university of Jaffna
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/12643

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா: 26 ¼ சூரி 7 செவ் 10 இல்
உயரம்: 5' 9"
தகைமை/தொழில்:A/L வியாபாரம் கமம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12646

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து, கிறிஸ்தவம்
நட்சத்திரம்: ரேவதி 1
கி.பா: 18 சூரி.செவ் 11 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்:MBBS Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ:G/12692

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா: சூரி 8 செவ் 9 இல்
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்:C.I.M.A Stage III student
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர் உயர்பதவி விரும்பத்தக்கது.
தொ.இ:G/12695

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 6 சூரி 5 செவ் 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:பட்டதாரி (BSc) ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ:G/12697

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: 15 ¼ சூரி 9 செவ் 10 இல்
உயரம் : 164 cm
தகைமை/தொழில் :A/L Bio Stream Diploma ICT
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12699

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# முள்ளிவாய்க்கால் கஞ்சியை பருகிய படையினர்



(குப்பிழான்)

நல்லூரில் விசேட அதிரடிப்படையினர் மற்றும் புலனாய்வாளர்களுக்கும் முள்ளி வாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் ஆரம்ப நாளான நேற்று வியாழக் கிழமை காலை நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தின் முன்பாக முள்ளி வாய்க்கால் கஞ்சி காய்ச்சி மக்களுக்குப் பரிமாறியிருந்த வேளை சம்பவ இடத்திற்கு ஜீப் வாகனமொன்றில் துப்பாக்கிகளுடன் வருகை தந்த விசேட அதிரடிப்படையினருக்கும் முள்ளிவாய்க் கால் கஞ்சியை வழங்கியுள்ளனர். அவர்களும் கஞ்சியை வாங்கிப்பருகினர். (நி-18-33-104)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 44

# கவனத்தை சிதறடிக்காதே...



ஒரு யுத்தத்தில் எதிரி நாட்டு இளவரசனை உயிரோடு பிடித்து ராஜாவின் முன்பு நிறுத்தியிருந்தனர்.

இளவரசன் தன் உயிருக்காகக் கெஞ்சி மன்றாடி தன்னை மன் னிக்கும் படியாக கேட்டுக்கொண்டான்.

அதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது என்றார் வெற்றி பெற்ற ராஜா .

“விளிம்புவரை தண்ணீர் நிரப்பப்பட்ட பாத்திரம் ஒன்று உனது கையில் தரப்படும்.

அதனை சாலை ஒன்றின் வழியாக ஒரு சொட்டு தண்ணீர் கூட கீழே சிந்தாமல் குறிப்பிட்ட நேரத்துக்குள் ஒரு மைல் தூரம் கொண்டு செல்ல வேண்டும்.

கூடவே உருவிய பட்டையத்தோடு எனது வீரர்கள் வந்துகொண்டு இருப்பார்கள்.

ஒரு துளி தண்ணீர் கீழே கொட்டினாலும் கூட அவர்களின் வாள் உன் தலையைச் சீவி விடும்.

வெற்றியோடு முடித்துவிட்டால் விடுதலை” என்று பேரரசர் தனது நிபந்தனையை விதித்தார்.

குறிப்பிட்ட நேரம் வந்தது.

இலட்சக்கணக்கான மக்கள் அந்த சாலையின் இரு பகுதிகளிலும் குழுமியிருந்தனர்.

போர் வீரர்கள் சாலையை ஒழுங்கு செய்து கொடுத்தனர்.

பேரரசர் முன்னிலையில் முழுவதும் தண்ணீர் நிரப்பிய பாத்திரம் இளவரசனின் கைகளில் கொடுக்கப்பட்டது.

ஒரு பகுதியில் இருந்த மக்கள் இளவரசனை ஊக்குவித்து உற்சாகப்படுத்தினர்.

மறுபக்கத்தில் இருந்தவர்களோ கேலியும் பரிகாசமும் செய்து கூச்சலிட்டனர்.

இளவரசனின் இருபுறமும் வீரர்கள் உருவிய வாளோடு தண்ணீர் சிந்துமானால் வெட்டும்படி கவனித்துக்கொண்டிருந்தனர்.

பாத்திரத்தை உறுதியாய் பிடித்துக்கொண்ட இளவரசன் நடக்க சுற்றுப்புறத்திலிருந்து கூச்சலும் பரிகாசமும் ஆர்ப்பாட்டங்களும் கேட்டுக்கொண்டே இருந்தன.

எனினும் எதையும் பொருட்படுத்தாதபடி தண்ணீரிலே முழுக் கவனமும் வைத்து ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடித்தான் இளவரசன் .

அவனைப் பாராட்டிய பேரரசர் இளவரசனே உன்னை கேலி செய்தவர்களுக்கு நீ தண்டனை வழங்கலாம்.

உன்னை உற்சாகப்படுத்தியவர்களுக்கு நன்றி சொல்லலாம்.

அவர்களை கவனித்து வைத்திருக்கிறாயா என்று கேட்டார்.?

என்னை போற்றுபவர்களை நான் கவனிக்கவில்லை,

தூற்றுபவர்களையும் நான் பார்க்கவில்லை.

“எனது கவனமெல்லாம் தண்ணீரில் அல்லவா இருந்தது.”

விடுதலையோடு கூட அரசர் ஒரு ஆலோசனை தந்தார்.

இளவரசனே பாத்திரத்தில் உள்ள தண்ணீர் தான் உன் சரீரத்தில் உள்ள ஆத்மா வாழும் நாட்களிலே உன் ஆத்மாவில் கண்ணும் கருத்துமாக இருந்து கடைசியில் அதை சிருஷ்டி கர்த்தாவிடம் ஒப்படைக்க வேண்டும்.

போற்றுவோரைக் கண்டு பெருமை கொள்ளாதே.

தூற்றுவோரைக்கண்டு சோர்ந்து போகாதே. ஆத்மாவில் கவனம் வை என்றார்.

**அன்பு வாசகர்களே!**

**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் “முகநூல் தரிசனம்” பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

## சுவீடன் சென்றார் போரிஸ்

(லண்டன்)

பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் நேற்று சுவீடன் நாட்டுக்கு சென்றுள்ளார்.

இந்த பயணத்தை தொடர்ந்து அவர் பின்லாந்துக்கு செல்லவுள்ளார் என பி.பி.சி. நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. நேட்டோ கூட்டணியில் சேரலாமா என்பது குறித்து இரு நாடுகளிடமும் கலந்துரையாடும் வகையில் அவரது இந்த விஜயம் அமைந்துள்ளது.

மேலும் குறித்த விஜயத்தின்போது உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பிற்கு ஐரோப்பாவின் நிலைப்பாடு பற்றி விவாதிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் படையெடுப்பிற்குப்பிறகு, நேட்டோ கூட்டணியில் இணைவதற்கான ஆதரவு சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகிய இரு நாடுகளிலும் அதிகரித்துள்ளது. (நி)

## ரஷ்யா...

## தருத்...

(கீவ்)

**தங்கள் நாட்டு ... மேற்கொள்ளப்படு... உக்ரைன் அறிவித்து...**

ரஷ்யாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் எரிபொருளில் 3 இல் ஒரு பங்கு, உக்ரைன் வழியாக குழாய்

## விமான பயணத்தில் மாஸ்க் க...

## ஐரோப்பிய ஒன்றியம்...

(பிரஸ்ஸல்ஸ்)

அடுத்த வாரம் முதல் விமான நிலையங்களிலும் மாஸ்க் அணிவது இனி கட்டாயமாக இருக்காது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கொரோனா பரவல் தொடங்கி இரு ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ள நிலையில், கொரோனாத் தொற்று பாதிப்புகள் உலகம் எங்கும் படிப்படியாக குறைந்து வருகின்றன.

இந்த நிலையில் அடுத்த வாரம் முதல் விமான நிலையங்களிலும் விமானங்களிலும் மாஸ்க் அணிவது இனி கட்டாயமாக இருக்காது என்று ஐரோப்பிய

## பற்றி எரிந்...

## மயிரிழையில் உ...

## சீனாவில் சம்...



(பீஜிங்)

சீனாவின் சோங்கிவிங் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட திபெத் விமானம் தீப்பிடித்து விபத்துக்குள்ளானது.

விமானத்தில் இருந்த 113 பயணிகள் மற்றும் 9 விமானப் பணியாளர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் சோங்கிவிங் ஜிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...வின் எரிவாயு விநியோகத்தை ...து நிறுத்தியது உக்ரைன்

...டு வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு குழாய் மூலம் ...டும் எரிவாயு விநியோகத்தை தடுத்து நிறுத்தியுள்ளதாக ...்துள்ளது.

மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து 11 வாரங்கள் ஆன நிலையிலும், அந்த நாட்டு வழியாக இதுவரை ரஷ்ய எரிபொருள் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், ஐரோப்பிய நாடுகளுக்கு ரஷ்ய எரிவாயு கொண்டு செல்லப்படும் வழித்தடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் தடை ஏற்படுத்தியுள்ளதாக உக்ரைன் அறிவித்துள்ளது. (நி)



## ...கட்டாயமில்லை ...ம் அறிவிப்பு

...ஒன்றியம் தெரிவித்துள்ளது. மேலும் ஐரோப்பா முழுவதும் பொதுப் போக்குவரத்தில் கொரோனா எதிர்ப்பு கொள்கைகளை மாற்றியமைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஐரோப்பிய ஒன்றிய ஏவியேஷன் சேஃப்டி ஏஜென்சி (ஈசா) தெரிவித்துள்ளது. (நி)

## ஸ்பெயினில்

## 4 ஆயிரம் பெற்றோல் நிலையங்களை மூடும் அபாயம்


(மாட்ரிட்)

எரிபொருள் விலை உயர்வை ஈடு செய்ய ஸ்பெயின் அரசு பல்வேறு கொள்கைகளை வகுத்துள்ள போதிலும், சில சிக்கல்களையும் சந்தித்து வருகிறது.

ரஷ்யா-உக்ரைன் இடையிலான போர் மற்றும் கொரோனாத் தொற்று பரவல் உள்ளிட்ட காரணங்களால் ஐரோப்பிய நாடுகளில் எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

ஸ்பெயின் நாட்டின் ஜனாதிபதி பெட்ரோ சான்செஸ், மார்ச் மாத இறுதியில் வெளியிட்ட அறிவிப்பின்படி, ஒரு லீற்றர் எரிபொருளுக்கு 20 செண்ட் தள்ளுபடி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மானியத்திற்காக அரசு 15 செண்ட் செலுத்தும் என்றும் பெற்றோல் நிலையங்கள் 5 செண்ட் செலுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.




அரசின் இந்த கொள்கை முடிவு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. ஆனால் சிறு மற்றும் நடுத்தர பெற்றோல் நிலையங்களுக்கு இதனால் பெருத்த இழப்பு ஏற்படும் என கண்டனங்கள் எழுந்தன.

இதனால் 350 இற்கும் அதிகமான பெற்றோல் நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதே நிலை தொடர்ந்தால் நாடு முழுவதும் சுமார் 3,000 முதல் 4,000 பெற்றோல் நிலையங்களை மூட வேண்டிய நிலை ஏற்படும். என அந்நாட்டின் எரிபொருள் விநியோகஸ்தர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (நி)

# ...ந்தது விமானம் ...உயிர்தப்பிய பயணிகள் ...ம்பவம்

...ங்பெய் சர்வதேச விமான நிலையத்தில் திபெத்திய எயார்லைன் நிறுனத்தைச் சேர்ந்த #TV8933 என்ற விமானம் நேற்றுக் காலை 8 மணி அளவில் புறப்படுவதற்காக விமான ஓடுதளத்தில் சென்ற போது திடீரென தீப்பிடித்து எரிந்தது.

அதிஷ்டவசமாக எவருக்கும் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

விமான ஓடுதளத்திற்கு விரைந்து சென்ற தீயணைப்புப் படை வாகனங்கள் உடனடியாக செயற்பட்டு தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன.

ஓடுபாதையை விட்டு விமானம் விலகியதால் தீப்பிடித்ததாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)




## முதல் முறையாக வடகொரியாவில்

## பொதுமுடக்கம் அமுல்

(பியாங்யாங்)

வடகொரியாவில் முதன்முறையாக ஒருவருக்கு கொரோனா வைரஸ் (பிஏ.2 வகை வைரஸ்) தொற்றுப் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அங்கு முழு பொது முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் பியாங்யாங்கில் பிஏ.2 எனப்படும், அதிக அளவில் பரவக்கூடிய ஒமிக்ரோன் வைரஸின் துணை மாறுபாடு கண்டறியப்பட்டதாக அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

இதனைத்தொடர்ந்து, வடகொரிய தலைவர் கடுமையான தேசிய அவசர நிலையை அறிவித்துள்ளார்.

அத்துடன் தொற்று நோயை விரைவாக அகற்றுவதாகவும் அவர் உறுதியளித்தார்.

ஒமிக்ரோன் மாறுபாட்டின் கண்டுபிடிப்பு வட கொரியாவிற்கு ஒரு தீவிரமான ஆபத்தை அளிக்கிறது. நிபுணர்களின் கூற்றுப்படி, அதன் 25 மில்லியன் மக்களில் யாருக்கும் தடுப்பூசி போடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் பசி போக்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சி

## தமிழின அழிப்பு வாரத்தின் முதல் நாளில் முன்னெடுப்பு

(பணிக்கன்குளம்)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடிய காலகட்டத்தில் மக்கள் பாரிய உணவு நெருக்கடிக்கு முகம் கொடுத்தனர்.

அந்த மக்கள் உணவுத் தேவைக்காக பல்வேறு இன்னல்களை சந்தித்து வந்த நிலையில் முள்ளிவாய்க்காலில் அவர்களது பசி போக்கியது முள்ளிவாய்க்காலில் வழங்கப்பட்ட கஞ்சியே ஆகும்.

தமிழின அழிப்பு வாரத்தின் ஆரம்ப நாளான நேற்றைய நாளில் இருந்து எதிர்வரும் 18ஆம் திகதி வரை முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்குவதற்கு வடகிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கமும் பொது அமைப்புகளும் இணைந்து வேலைத் திட்டமொன்றினை வடகிழக்கெங்கும் முன்னெடுத்துள்ளன.

அந்த வகையிலே இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குகின்ற நிகழ்வு நேற்று காலை முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் மண் உட்பட கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெற்றது.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பொது அமைப்புகள் இணைந்து முன்னெடுக்கும் இந்த கஞ்சி வழங்கும் திட்டமானது எதிர்வரும் நாட்களில் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட உள்ளதோடு தமிழ் மக்கள் உணவுத் தட்டுப்பாடு எதிர்நோக்கிய போது இந்த கஞ்சி மட்டுமே அவர்களுக்கு வாழ்வளித்தது என்பதை எதிர்கால சந்ததிகளுக்கு கடத்தும் முகமாக கஞ்சி பற்றிய துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

(நி-6-18-33-100-104-281-285-299-316)



















## மின்சாரசபை ஊழியர் மீது தாக்குதல் நடத்தியவருக்கு விளக்கமறியல்

(பணிக்கன்குளம்)

முல்லைத்தீவு மின்சார சபை ஊழியர் ஒருவர் உட்பட மூவர் மீது அண்மையில் தாக்குதல் நடத்தியவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமூலை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மின் பட்டியல் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மின்சார சபை ஊழியர் ஒருவர் மீது கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

குறித்த தாக்குதலுக்குள்ளான மின்சார சபை ஊழியர் தன்னுடைய அலுவலகத்துக்கு தகவல் வழங்கி முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நேற்று முன்தினம் காலை ஒருவரை கைது செய்தனர்.

அவரை மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது குறித்த நபரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(நி-6-281)

## நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கோரிக்கை

(தருமபுரம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்வெட்டு காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து மக்களின் நாளாந்த தேவைக்கு ஏற்ற அளவில் நீரை சுத்திகரித்து விநியோகிக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

மேற்படி மாவட்டங்களில் இனிவரும் நாட்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்த நிலைமையின் காரணமாக பொது மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறும் பகல் வேளைகளில் விநியோகிக்கப்படும் நீரின் அழுத்தம் குறைவாக காணப்படுகின்றமையால் இரவு வேளைகளில் நீர்தாங்கிகளிலோ அல்லது கொள்கலன்களிலோ நீரினை சேமித்து வைத்து பாவிக்குமாறு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. (நி-6-316)

### ஊரடங்கு தளர்வை அடுத்து

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அலைமோதிய சனக்கூட்டம்

(மன்னார்)

நாடளாவிய ரீதியில் நேற்று 7 மணியளவில் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்ட நிலையில் பெரும்பாலான மக்கள் எரிபொருட்களை கொள்வனவு செய்வதற்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அதிகளவில் ஒன்று கூடியிருந்தனர்.

(நி-6-18-33-104-285)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டாவின் கீழ் எந்தப் பதவியும் எனக்கு வேண்டாம்

## சரத் பொன்சேகா அதிரடி

(கொழும்பு)

**தற்போதைய ஜனாதிபதியின் கீழ் அரசாங்கத்தில் எந்தவொரு பதவியையும் ஏற்கத் தயாராக இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**



பிரதமர் பதவியை வழங்குவதற்காக, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்புகொண்டதாக தகவல்கள் தெரிவித்திருந்தன. இந்த நிலையிலேயே தனது உத்தியோகபூர்வ முகநூல் பதிவில் சரத் பொன்சேகா இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பதிவில், "பொய்ப் பிரசாரத்தின் மூலம் பொதுமக்களை தவறாக வழிநடத்தும் எந்தவொரு முயற்சியையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் எந்தவொரு பதவியையும் ஏற்க நான் திட்டவட்டமாக மறுக்கிறேன். அமைதியான, வன்முறையற்ற உள்நாட்டுப் போராட்டத்தின் மூலம் முழு இலங்கை தேசத்தின் முக்கிய கோரிக்கைகளில் நானும் நிபந்தனையின்றி நிற்கிறேன்.

காலிமுகத்திடல் போராட்ட மைதானத்தில் இருந்து நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் தேசத்தின் பேரப்பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் குரல் கொடுக்கும் மக்களின் கோரிக்கைகளை நான் மிகவும் உணர்கின்றேன். ஆரம்பத்தில் இருந்தே, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் துணிச்சலான போராளிக் குடிமக்களின் குழந்தைகளுக்கு நான் முழுமனதுடன் ஆசீர்வதித்தேன். காலிமுகத்திடலில் போராடுபவர்களுடன் கலந்துரையாடாமல் ராஜபக்ஷ நெருக்கடியை தீர்ப்பதில் நான் ஒரு பகுதியாக இருந்ததில்லை" என அவர் பதிவிட்டுள்ளார். (நி)

# கட்சி தாவத் தயாராகும் 25 பாராளுமன்ற உறுப்பினர்கள்


(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவர் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அவர்களில் 11 பேர் நேற்று முன்தினம் இரவு ரணில் விக்கிரமசிங்கவுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நாடு எதிர்நோக்கும் நெருக்கடியைப் போக்க தொலை நோக்கு பார்வை கொண்ட தலைவர் நாட்டுக்குத் தேவை என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# இனத்தை அழித்த எதிரி இடத்தை மறக்கும் வரை அடி

## திருமலையில் சுவரொட்டிகள்



(திருமலை)

திருகோணமலை நகரில் தமிழ் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த சுவரொட்டிகளில், "பனிவிழும் இந்த இரவில் நடந்து படைத்தவன் மேல் பழியை எறிந்து விளம்பரம் மட்டும் விதைக்க நினைத்து விடைதெரியாத கூட்டம் நாங்கள், நெஞ்சத்தில் வஞ்சம் இல்லை எங்களின் கூட்டம் வேறு நேர் கொண்ட பார்வையில் இனி குற்றம் குடி கொள்ளாது. வேந்தன் உரைத்த வேதம் சில விலங்குகளுக்கு தெரியாது, காலம் கடந்த ஞானம், கலவரத்தால் விடை தேடு. இனத்தை அழித்த எதிரி இடத்தை மறக்கும் வரை அடி" என எழுதப்பட்டுள்ளது.

இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ள பிரதேசத்தை அண்டிய வீதிகளில் இலங்கை இராணுவத்தினரின் பிரதான சோதனை சாவடிகள் அமைந்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# இலங்கைப் பயணம் குறித்து மீள்பரிசீலனை செய்யுங்கள்

## தனது நாட்டுப் பிரஜைகளுக்கு அவுஸ்திரேலியா ஆலோசனை

(கொழும்பு)

இலங்கைக்கு பயணம்செய்ய வேண்டியதன் அவசியத்தை மீள்பரிசீலினை செய்யுமாறு அவுஸ்திரேலியா தனது நாட்டு பிரஜைகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. அவுஸ்திரேலிய அணி இலங்கைக்கு எதிர் வரும் ஜூன் மாதம் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருந்த நிலையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை குறித்து அவுஸ்திரேலியாவின் வெளி விவகார அமைச்சினால் வீரர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (நி)

# வன்முறையை நிறுத்துவோம்

## - நாமல் டுவிட் -




(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மையால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இரங்கல் தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை பதிவிட்டு இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டு மக்கள் வன்முறையை தவிர்க்க வேண்டும் என அவர் கூறியுள்ளார். இந்த கொடூரமான நேரத்தில் இறந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பாக அமரகீர்த்தி அத்துகோரலவுக்கும் என் ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறேன். அவர் எல்லா வகையிலும் நல்ல மனிதராகவே செயற்பட்டார். இது வரையில் இடம்பெற்ற அனைத்து விடயங்களும் வருத்தத்திற்குரிய விடயமாகும். வன்முறையை நிறுத்துவோம்" என நாமல் [illegible] தெரிவித்துள்ளார். (நி)

# வெசாக் கொண்டாட்டத்திற்கு தயாராகும் கொழும்பு



(கொழும்பு)

நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள போதிலும் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வெசாக் பண்டிகைக்காக வெசாக் பந்தல்கள் மற்றும் அலங்காரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய, கொழும்பில் உள்ள பழமையான பந்தல்களில் ஒன்றான "தெமட்டகொட தொரண" நேற்று நிர்மாணிக்கப்பட்டது.

மேலும் பல வெசாக் அலங்காரங்கள் தெமட்டகொட மற்றும் பொரளை பகுதிகளில் அமைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 320 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 350 |
| தக்காளி | 600 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 130 | 120 |
| கோவா | 180 | 180 | 200 |
| கரட் | 180 | 280 | 350 |
| பூசணி | 80 | 70 | 100 |
| புடோல் | 200 | 150 | 200 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 320 | 100-400 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 550 | 500 | 600 |
| வெண்டக்காய் | 200 | 150 | 240 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 200 |
| பயற்றங்காய் | 600 | 350 | 200 |
| லீக்ஸ் | 160 | 200 | 280 |
| பீற்றூட் | 180 | 220 | 300 |
| கறிமிளகாய் | 350 | 200 | 320 |
| முருங்கைக்காய் | 850 | 800 | 1000 |
| போஞ்சி | 450 | — | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | — | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 140 |
| தேசிக்காய் | 650 | 400 | 700 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50-80 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 450 | 300 | 320 |
| முள்ளங்கி | 80 | — | 280 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | — | — | 180 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## ஏன் போகவில்லை?



(நேற்றைய தொடர்ச்சி)

பாலகிருஷ்ணன் மாலையானதும் மாடுகளை ஓட்டிக் கொண்டு தன் ஊரை அடைந்தான். அவனுக்கு அன்றிரவு தூக்கமே வரவில்லை. அவன் சந்திரலேகா கூறியது பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான். யோசித்து முடிவில் அவன் தன் கிராமத்தை விட்டு அரண்மனைக்கு போய் விடுவது என்று தீர்மானித்துக் கொண்டான்.

தன் கிழத் தந்தையை அழைத்துக் கொண்டு அவன் அரண்மனையை அடையவே அவனை சந்திரலேகா மகிழ்ச்சியுடன் வரவேற்றாள். அவனுக்குத் தனியாக ஒரு மாளிகையை அமைத்துக் கொடுத்தாள். எல்லா வசதிகளும் பெற்ற பாலகிருஷ்ணனின் வாழ்க்கை முறையே முற்றிலும் மாறி விட்டது. இளவரசி விரும்பும் போது குழல் இசைப்பது அவன் வேலை அதற்கு மாத ஊதியம் ஆயிரம் வராகன்கள்.

இப்படி இருக்கையில் நீலகண்டன் என்பவன் ஒரு நாள் மன்னனைக் காண வந்தான்.

அவன் தான் ஒரு புல்லாகுழல் வித்துவான் எனக் கூறவே அப்போது தர்பாரில் இருந்த சந்திரலேகா அவனை குழலை இசைக்கச் சொன்னாள். அவனும் ஒருமணி நேரம் குழலில் இசைக்க யாவரும் மெய்மறந்து கேட்டு முடிவில் கைதட்டிப் பாராட்டினார்கள். மன்னனும் அவனுக்குப் பல விலையுயர்ந்த பரிசுளை அளித்தான் நீலகண்டனின் குழலிசையைக்கேட்டபின் சந்திரலேகாவிற்கு பாலகிருஷ்ணனின் குழலிசை மிகச் சாதாரணமாகப் பட்டது.

தன் தந்தையிடம் கூறி நீலகண்டனை ஆஸ்தான வித்துவானாக நியமிக்கச் செய்தாள். நீலகண்டனின் மதிப்பு உயரவே பாலகிருஷ்ணனுக்குக் கிடைத்து வந்த ஆதரவு குறைந்து போயிற்று. சந்திரலேகா பாலகிருஷ்ணனின் இசையைக் கேட்கும் வழக்கத்தை விட்டு விட்டாள்.

ஒருநாள் இந்திரபுரி இளவரசி இந்துமதி சந்திரபுரி இளவரசி சந்திரலேகாவைக் காண வந்தாள். அவள் சந்திரலேகாவின் சிற்றப்பாவின் மகள் .அவள் தன்னோடு ஒரு கிளியையும் கொண்டு வந்திருந்தாள்

அவள் அக்கிளியைச் சந்திரலேகாவிற்குக் காட்டி "அக்கா! இந்தக் கிளி பேசுவதோடு பாட்டும் பாடும்" என்று கூறி அதனை புகழ்ந்து கூறினாள். சந்திரலேகாவும் அதனைப் பார்க்கவே அது நன்றாகப் பேசி ஒரு பாட்டும் பாடியது.

அது கண்டு சந்திரலேகா ஒரேயடியாக மகிழ்ந்து போய்"அடேயப்பா! உன் கிளி எவ்வளவு அழகாகப் பாடுகிறது!" என்றாள். அவர்கள் இருவரும் வெகு நேரம் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்




இராமனிடம் அங்கதனை அடைக்கலமாய் ஏற்று ஆதரிக்குமாறு வேண்டிக் கொண்டான் வாலி; இராமனும் அங்கதனுக்குத் தன் உடை வாளைத் தந்து அவனைப் பெருமைப்படுத்தினான்.

வாலி தன் மார்பில் பதிந்திருந்த அம்பினைப் பிடுங்கி வெளியே எடுத்தவுடன் 'இரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்தது; அவன் உயிரும் அவனிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றது; தாரை உயிரற்ற அவன் உடல் மீது விழுந்தாள்; புரண்டாள்; அழுதாள்; அரற்றினாள்.

"உன் தோளில் துயிலும் நான் இன்று, தரையில் விழுந்து துடிக்கிறேன்; உயிரும் உடம்புமாக இருந்த நாம் இனி எப்படித் தனித்துச் சாக முடியும்? "இந்த வெறும் உடம்பு, நீ இல்லாமல் எப்படி வாழும்? காலையும் மாலையும் சென்று நீ முக்கண்ணனை வழிபடுவாயே! இப்பொழுது நீ என்ன செய்வாய்? எப்படி உன்னால் வாளா இருக்க முடிகிறது? என் மெல்லிய ஆடை மீது சாயும் நீ, எப்படி வன்மையான தரையில் கிடக்கிறாய்? பொய் புகலாத புண்ணியனே! நீ என் உயிர்" என்று புகழ்ந்து பேசுவாயே! உயிரைவிட்டு உயிர் எப்படிப் போக முடியும்? அது பொய்யுரையாகி விட்டதே; உன் உள்ளத்தில் நான் உறைந்தேன் என்பது உண்மையாய் இருந்தால் இந்த அம்பு என்னையும் தாக்கி, என் உயிரையும் போக்கி இருக்க வேண்டுமல்லவா? அமுதத்தைத் தந்த உனக்குத் தேவர் பாராட்டுரை வழங்க, எதிர் கொண்டு அழைத்து உபசரித்தார்களோ? "உன் தம்பிக்கு வாழ்வு தா" என்று இராமன் வாய் திறந்து கேட்டிருந்தால் வள்ளல் ஆகிய நீ, மறுத்துப் பேசி இருப்பாயா? போருக்குச் சென்ற போதே தடுத்தேனே, இராமன் சுக்கீரவனுக்குத் துணையாய் வந்திருக்கிறான் என்று சொன்னேனே, நீ கேட்கவில்லையே! சாவை விரும்பி ஏற்றுக் கொண்டாயே! "அம்பு ஒன்றால் உன் மார்பைப் பிளக்க முடியும்" என்று இதுவரை நான் நம்பியதில்லை; இது புதுமையாய் இருக்கிறது" என்று புலம்பினாள்.

தன் மகனை விளித்து, "தம்பியும் தமையனும் உறவு கொண்டிருந்த போது உயர்ந்திருந்தனர். பகை புகுந்தபோது எவ்வளவு பெரிய அழிவு ஏற்பட்டு விட்டது பார்த்தாயா? அறச் செல்வனாகிய இராமனும் அறம் திறம்ப முடியும் என்பதை நீ எண்ணிப் பார்த்ததுண்டா?" என்று கடுமையாய் விமர்சித்தாள்; அதற்கு மேல் தொடரவிடாது. அனுமன் இடை நின்று தடுத்து தாரையை அந்தப்புரத்துக்கு அனுப்பி வைத்தான்; அங்கதனைக் கொண்டு ஈமக் கடன் செய்வித்தனர்; நடக்க வேண்டியதில் நாட்டம் கொண்டனர்.

### முடிபுனை விழா

தம்பி இலக்குவனிடம் சுக்கிரீவனுக்கு அவன் கையால் முடி சூட்டும்படி கட்டளை இட்டான் இராமன். சுக்கிரீவனுக்கு முடி சூட்டப்பட்டது; இராமன் பின்வருமாறு அறிவுரை கூறினான். "நீயும் அங்கதனோடு ஒற்றுமையாய் இருந்து நல்லரசு நடத்துவாயாக அமைச்சரையும் படைத் தலைவரையும் தக்க வகையில் பயன்படுத்திக் கடமைகளைச் செய்துமுடிப்பது அறிவுடைமை ஆகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.
– மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மான்கள் போட்ட சாபம் வேடர்களை மட்டுமல்ல நரிகளையும்...

வெளிநாட்டிலுள்ள நண்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இலங்கை நிலைவரம் எவ்வாறு உள்ளது என்று வினவினார்.

அதற்கு என் ப்தில் இவ்வாறாக அமைந்தது.

அமுதத்தை பருகுவதற்காக மந்தர மலையை மத்தாகவும் வாசுகிப் பாம்பை நாணாகவும் கொண்டு தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைகின்றனர்.

அமுதம் கிடைக்கும் என்ற ஆவலோடு இரு தரப்பும் வேகமாக பாற்கடலை கடைய,

அந்தோ! வாசுகிப் பாம்பு ஆலகால விசத்தை கொட்டியது.

அதுபோல இலங்கையின் அரசியல் கள நிலைமை அமைந்துள்ளது என்று கூறி, ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றுள்ளார் என்றேன்.

அதற்கு அந்த நண்பர்; இல்லை நீங்கள் கூறுவது முற்றிலும் தவறு.

இப்போது இலங்கையின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார். அவர் பதவியேற்றுள்ளது மகிந்த ராஜபக்ஷவையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் காப்பாற்றுவதற்காக என்பதை இலங்கை மக்கள் நன்கு அறிந்துள்ளனர்.

ஏலவே அரசியல் களத்தில் இருந்து மக்களால் ஓரங்கட்டப்பட்ட ரணில் விக்கிரமசிங்க ஒற்றை ஆளாக இருந்து பிரதமராகப் பதவியேற்றார் எனில், அது அவர் செய்த ஊழ்வினை என்பதுதான் உண்மை.

நான் சொல்வதை குறித்து வையுங்கள். மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் இருந்து துரத்தியடித்த இலங்கை மக்கள் ஜனாதிப்தி கோட்டாபய ராஜபக்ஷவையும் நிச்சயம் அந்தப் பதவியில் இருந்து துரத்துவர்.

அதற்கான போராட்டம் நடக்கும்போது அதில் அடியுண்டு போகப் போபவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்பதை நீங்கள் அத்தருணம் அறிவீர்கள்.

நண்பரே! நாங்கள் **நரிபட்ட பாடு** என்றொரு கதை படித்த ஞாபகம் இருக்கிறதா?

வேடன் ஒருவன் மானை இலக்கு வைத்து மரத்தில் மறைந்திருக்கிறான். இதனை அவதானித்த நரியொன்று மானை உருசி பார்ப்பதற்காகப் பற்றைக்குள் மறைந்திருக்கிறது.

அந்நேரம் மானை நோக்கி வேடன் அம்பை எய்கிறான்.

கெடுகாலம் இலக்குத் தவறி மான் தப்பியோட எய்த அம்பு பற்றைக்குள் மறைந்திருந்த நரியைப் பதம் பார்க்க, மான் இறைச்சிக்கு ஆசைப்பட்ட நரி ஊளையிட்டவாறு உயிரிழுந்துபோனது.

அந்தக் கதை நடப்பதற்கான நேரம் நெருங்கி விட்டது.

ஆம், மான்கள் போட்ட சாபம் வேடர்களைத் தண்டிக்கும் போது அந்தச் சாபம் நரிகளையும் விட்டுவிடுமா என்ன?

நண்பரே! ஒன்றைமட்டும் கூறவிரும்புகிறேன். சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் கர்ணனே வீழ்ந்தானெனில், கூனிகளும் சகுனிகளும் எங்ஙனம் தப்ப முடியும்?

ஆகையால் யார் பதவி ஏற்றாலும் பதறாதீர்கள். மக்கள் நிதானமாக இருக்கிறார்கள்.

அவர்கள் வழங்கும் தீர்ப்பு மகேசன் தீர்ப்பாக அமையும் நம்புங்கள்.

# ரணிலைப் பிரதமராக நியமிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவிக்கு நியமிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்ததாக கூறப்படும் முடிவு குறித்து நேற்று கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய பேராயர் அதிருப்தி தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மட்டுமே. அவர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கவில்லை.

எனவே, அவர் பிரதமராக நியமிக்கப்பட்டால் அது சட்டபூர்வமானதாக அமையாது. தற்போது இந்த நாட்டில் உள்ள மக்கள் விரும்பும் தீர்வு இதுவல்ல என்று அவர் கூறினார். (ம)

### இலங்கைக்கு பயணிக்க வேண்டாம்

# அந்நாட்டு மக்களுக்கு சிங்கப்பூர் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு அத்தியாவசியமற்ற பயணத்தைத் தவிர்க்குமாறு சிங்கப்பூர் மக்களுக்கு வெளியுறவுத் துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

சிங்கப்பூர் மக்களுக்கு அந்நாட்டு வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கைக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மக்கள் யாரும் மேற்கொள்ள வேண்டாம். இலங்கையில் உள்ள சிங்கப்பூர் மக்கள் யாரும் பொது இடங்களுக்கோ, போராட்டம் நடைபெறும் இடங்களுக்கோ செல்வதை தவிர்க்க வேண்டும்.

செய்திகள் மற்றும் உள்நாட்டு அதிகாரிகளின் வழிகாட்டு நெறிமுறைகளை அனைவரும் முறையாக பின்பற்ற வேண்டும்.

சிங்கப்பூரில் உள்ளவர்கள் மற்றும் செல்லும் பயணிகள் அனைவரும் பயணக் காப்பீட்டை உடனடியாக பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. (ம)

# அங்கஜன் பதாகை தீ வைத்து எரிப்பு

## சுழிபுரத்தைச் சேர்ந்த ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் சண்டிலிப்பாய் தொகுதி அலுவலக பதாகைக்கு தீ வைத்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுழிபுரத்தைச்சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே நேற்று கைது செய்யப்பட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் சண்டிலிப்பாய் தொகுதி அலுவலகத்தின் முன் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தீ வைக்கப்பட்டது.

எனினும் பகுதியளவில் மட்டும் பதாகை சேதமடைந்தது.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயந்த குணதிலக, சுழிபுரத்தைச் சேர்ந்த ஒருவரை நேற்று கைது செய்தார்.

சந்தேக நபர் வேலை வாய்ப்புப் பெற்றுத் தரவில்லை என்ற விரக்தியில் அலுவலகப் பதாகைக்கு தீவைத்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் இந்தச் செயல் அமைந்ததால் சந்தேக நபர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ம-33,104)

### க.பொ.த சா/த பரீட்சைக்கான

# அனுமதிச் சீட்டு விநியோகம் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

இம்முறை நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதிச் சீட்டு விநியோகம் இன்று ஆரம்பமாகவுள்ளதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் பரீட்சைக்கான அனுமதிச் சீட்டு விநியோக பணிகள் நிறைவடையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிச் சீட்டு இன்று முதல் விநியோகிக்கப்படும். ஊரடங்கு சட்டம் நாட்டில் பிறப்பிக்கப்பட்டமையால் கடந்த சில தினங்களாக அனுமதிச் சீட்டு விநியோகத்தில் தாமத நிலை ஏற்பட்டது.

எனினும் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் அவை கிடைக்கும் என நம்புகிறோம்.

இல்லை என்றால் திங்கட்கிழமைக்குள் சகல நடவடிக்கைகளையும் நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம் என்றார். (ம)

## 6 மாவட்டங்களுக்கு

# மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக ஆறு மாவட்டங்களுக்கு நேற்று மாலை 4 மணி முதல் 24 மணித்தியாலங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மன வலிமையுடன் எதிர்த்து நிற்றலும் உள்ளுணர்வும்

துன்பத்தைத் தவிர்க்க ஒருவன் மனவலிமையுடன் எதிர்த்து நிற்பவனாகவும், எதையும் வலியுறுத்திப் பேசுபவனாகவும் ஆகிறான். அதனால், உள்ளுணர்வு ஆற்றலை இழந்து விடுகிறான்.

உள்ளுணர்வு என்பது உண்மைக்கு நெருக்கமாக உள்ளது. பெரும்பாலும் மனவலிமையுடன் எதிர்த்து நிற்றலும், வலியுறுத்திப் பேசுதலும் உண்மையுடைமை என்னும் கருத்தின் மீது செழித்தோங்குகின்றன. மனவலிமையுடன் எதிர்த்து நிற்கும் ஒருவன், தன்னுடைய மனப்பாங்கு நியாயமானது என நம்புகிறான். உண்மையாக இருக்கும் பொருட்டு நீங்கள் வலிமையுடன் எதிர்த்து நிற்க வேண்டியது இல்லை.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

இரவுக்கு வேண்டியதை பகலில் செய்து கொள்ள வேண்டும். மாரி காலத்தில் தேவையானவற்றை கோடையில் தயாரித்துக் கொள்ள வேண்டும். அதேபோன்று மறுமை உலகத்திற்கு வேண்டியதை இம்மை உலகத்திலேயே தேடிக்கொள்ள வேண்டும்.

இவ்வுலகில் இப்போது நாம் செய்யும் தான தர்மங்கள், புண்ணியங்கள்தான் மறுபிறவியில் தொடர்ந்து வரும்.

இறைவன் எங்கும் உளன், நீக்கமற நிறைந்துள்ள நிமலனை ஆலயத்தில் பாடியும், பரவியும், பணிந்தும் வழிபாடு செய்து அடைய வேண்டும். ஆதலால் இறை வழிபாடு அவன் அருளைப் பெற இன்றியமையாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 65

**நாட்டின் மலையகத்தில் 2,861 சதுர கிலோ மீற்றர் பரப்பில் வியாபித்துள்ள பதுளை மாவட்டம் ஊவா மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில் 2,861 சதுர கிலோ மீற்றர் இந்த மாவட்டத்திற்கு உரியதாகும். அது 33.7% ஆகும்.**

**பதுளை மாவட்டம், கிழக்கு மற்றும் தெற்கு திசைகளினால் மொனராகலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களையும் வடக்கு திசையால் அம்பாறை மற்றும் கண்டி மாவட்டங்களையும் மேற்குத் திசையால் நுவரெலியா மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி மொத்த நிலப் பரப்பில் 24% வனப் பிரதேசமாக காணப்பட்டது.**

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) படி மாவட்டத்தின் சனத்தொகை 815,405 ஆகும். ஒரு சதுர கிலோ மீற்றருக்கு சனத்தொகை அடர்த்தி 288ஆகும். 10 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு 91.8% ஆகும். மாவட்டத்தின் தலைநகரான பதுளை கொழும்பிலிருந்து நேரடியாக 133 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டு மாவட்டத்தினுள் 2,214 கி.மீ நீளத்திற்கு வீதிகள் அமைந்துள்ளன.பதுளை மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக விவசாயத் துறையில் (57%) அதைத்தொடர்ந்து சேவைத் துறையில் (33%) மற்றும் கைத்தொழிற் துறையில் (10%) ஆகும்.

### பதுளை மாவட்டம் இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு - 2012

இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபட்டுள்ள விதம் அட்டவணை (R1) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அட்டவேணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய, மாவட்டத்தின் பெரும்பான்மை மக்கள் சிங்களவர்கள் ஆவர். அது மொத்த மாவட்ட சனத்தொகையில் 73% ஆகும்.

பௌத்தர்கள் 72.6% அதற்கு அடுத்து இந்தியத் தமிழர்கள் 18.5% மற்றும் இந்துக்கள் 19.3%, இலங்கைமுஸ்லிம்கள் 5.5% மற்றும் இஸ்லாமியர்கள் 5.8% ஆகும்.

அட்டவணை (R1): இன மற்றும் மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடுபதுளை மாவட்டம்

| இனம் | எண்ணிக்கை | வீதம் | மதம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 595,372 | 73.0 | பௌத்தம் | 591,799 | 72.6 |
| இலங்கைத் தமிழர் | 21,880 | 2.7 | இந்து | 157,608 | 19.3 |
| இந்தியத் தமிழர் | 150,484 | 18.5 | இஸ்லாம் | 47,192 | 5.8 |
| இலங்கை முஸ்லிம் | 44,716 | 5.5 | கத்தோலிக்கம் | 12,020 | 1.5 |
| வேறு | 2,953 | 0.4 | ஏனைய கிருஸ்தவம் | 6,615 | 0.8 |
| | | | வேறு | 171 | - |
| மொத்தம் | 815,405 | | மொத்தம் | 815,405 | |

**பதுளை மாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச்சமூகங்கள்-2012**

| பிரதேசச்செயலகம் | தமிழர் | முஸ்லிம் |
|---|---|---|
| மஹியங்கனை | 187 | 1851 |
| ரிதீமாலியத்த | 202 | 14 |
| மீகஹகிவுல | 1998 | 20 |
| கந்தகெட்டிய | 846 | 572 |
| சொறணாதொட்ட | 4161 | 288 |
| பசறை | 19109 | 2255 |
| லுணுகாலை | 17106 | 1230 |
| பதுளை | 14709 | 7031 |
| ஹாலி-எல | 27989 | 3409 |
| ஊவா-பரணகம | 10386 | 2230 |
| வெலிமடை | 12464 | 16732 |
| பண்டாரவளை | 13561 | 3418 |
| எல்ல | 13119 | 1859 |
| அப்புத்தளை | 19299 | 3509 |
| ஹல்தும்முல்லை | 17228 | 298 |
| மொத்தம் | 172364 | 44716 |

### பதுளை மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின்படி தேர்தல் ஆணையாளரால் , ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்திற்கு18 மாகாணசபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி பதுளை மாவட்டம் 9 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாணசபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின்படி தேர்தல் ஆணையாளரால் , ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்திற்கு 18 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி பதுளை மாவட்டம் 9 மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

பதுளை மாவட்டத்தில் 15 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 567 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 815,405 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 90,601 ஆக நிர்ணயிக்கப்

**மாகாணசபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால் , ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்திற்கு 18 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி பதுளை மாவட்டம் 9 மாகாணசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

பட்டிருந்தது.

பதுளை மாவட்ட செயலகத்தில் 23.11.2017 மாலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 8 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்பிக்கும்படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 7 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 15 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது. சில பரிந்துரைகள் உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும், பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என கூறப்பட்டிருந்ததோடு அவற்றில் ஒன்று வெலிமடைப் பகுதிக்கு பல் உறுப்பினர் தொகுதி வழங்கப்பட வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டிருந்தது. மேலும் பரிந்துரைக்கப்பட்ட தொகுதிகளுக்கிடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததாலும், மேலும் பல ஆலோசனைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3(A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாததாலும் மேலும் ஏனைய பிரேரணைகள் போதுமான தகவல்களைக் கொண்டிராததாலும் இப் பிரேர

**பதுளை மாவட்டத்தில் 15 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 567 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 815,405 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 90,601 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

ணைகளை குழுவால் கருத்தில் ஏற்க முடியவில்லை.

அதுமட்டுமன்றி அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப்பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப்பெற்றன. அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத்தகவல் மற்றும் பிரதேச செயலக பிரிவுத்தகவல் ஆகும். குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) போன்றவற்றை விட பிரதேச செயலகங்களின் தகவல்களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக் கொண்டது.

அதே நேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைக் கூறுபோடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது. எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக்கொண்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமராகப் பதவியேற்ற ரணில் ராஜபக்ஷக்களின் பாதுகாவலர்

## ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க



(கொழும்பு)

**புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களின் பாதுகாவலர் என ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

ரணில் விக்கிரமசிங்க் புதிய பிரதமராக பதவியேற்றுள்ளமை தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தனது நிலைப்பாட்டை அறிவித்தார்.

நாட்டின் நெருக்கடிகளைத் தீர்க்கும் என ரணில் விக்கிரமசிங்கவும் கோட்டாபய ராஜபக்ஷவும் நம்பும் தீர்வை நாட்டில் உள்ள எவராலும் நம்பவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாது என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

"கோட்டாபயவை ரணில் நம்புவதும், ரணிலை கோட்டாபய நம்புவதும் தான் நடக்கும். அவர்கள் செய்வதை நாட்டின் குடிமக்கள் எவரும் நம்பமாட்டார்கள்" என அவர் கூறினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மக்களின் ஆணைக்கு செவிசாய்க்காமல் தீர்மானங்களை எடுத்துள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

"ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களின் பாதுகாவலர், அவர் அவர்களின் பாது காப்பிற்காக அதிகாரத்தைப் பெறுகிறார். அதேசமயம் ராஜபக்ஷக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாவலர்கள். அதைத்தான் கடந்த இரண்டரை வருடங்களாக நாங்கள் சுட்டிக்காட்டி வருகிறோம்," என்று அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

மக்களின் கோரிக்கைகளுக்கு யார் செவிசாய்க்கிறார்கள் என்பதில் தான் நெருக்கடிக்கு தீர்வு உள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

சூழ்ச்சிக்காரர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான தீர்மானங்களே எட்டப்பட்டுள்ளதாகவும் மாளிகைகளில் நடைபெறும் சதிகளின் மூலமாக மக்களின் உண்மையான. எதிர்பார்ப்பும் அபிப்பிராயங்களும் நிறைவேற்றப்படவில்லை எனவும் அநுரகுமார தெரிவித்தார். (ம)

## ஊரடங்குச் சட்டம்...

அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் வழங்கப்பட்ட எழுத்துபூர்வ அனுமதியின் அதிகாரத்தின் கீழ் தவிர, அந்த பகுதிகளில் உள்ள பொதுச்சாலை, புகையிரதப் பாதை, பொதுப் பூங்கா, பொது விளையாட்டு மைதானம் அல்லது கடற்கரையில் யாரும் தங்குவதற்கு அனுமதி இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மகிந்த, நாமல்...

டுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி கொழும்பில் காலி முகத்திடல் மற்றும் அலரிமாளிகை முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்த மனுவை விசாரித்த கோட்டை நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

முன்னாள் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பவித்ரா வன்னியாராச்சி, ரோஹித அபேகுணவர்தன, சி.பி.ரத்நாயக்க மற்றும் சனத் நிஷாந்த ஆகியோரும் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளவர்களின் பட்டியலில் உள்ளடங்குகின்றனர்.

மேலும், மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கும் வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. (ம)

## புதிய பிரதம...

தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கான வாழ்த்தினை பதிவிட்டுள்ளார்.

அவரது வாழ்த்தில் இந்த இக்கட்டான காலகட்டத்தில் பதவியேற்றுள்ள புதிய பிரதமருக்கு தன்னுடைய வாழ்த்தினை தெரிவிப்பதாக தெரிவித்துள்ளார். (ம)

## ரணிலுடன்...

வர் ஜூலி சங் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று புதிய பிரதமராக பதவியேற்றுள்ள நிலையில், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது டுவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம். அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கத்தை உடனடியாக ஸ்தாபிப்பதே இந்த நெருக்கடியைக் கையாள்வதற்கான முதற்படியாகும்" என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் குறிப்பிட்டுள்ளார். (ம)

## மிருசுவிலில்...

இலக்கான குறித்த பெண் வியாழக்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

இதில் கெற்பேலி மத்தி மிருசுவில் ப்குதியைச் சேர்ந்த 51 வயதான இ.தயாஸ்ரீ என்ற பெண்ணே இவ்வாறு அவரது வீட்டில் பாம்புக் கடிக்கு இலக்கான நிலையில் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (ம-30)

## ஐக்கிய மக்கள்...

பில் கலந்து கொண்டு உரையாற்றிய கட்சியின் செயலாளர் நாயகம் ரஞ்சித் மத்தும பண்டார கூறியுள்ளார். (ம)

## பிரதமரானார்...

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

நேற்று பிற்பகல், கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

ரணில் விக்கிரமசிங்க இதற்கு முன்னர் ஐந்து முறை பிரதமராகப் பதவி வகித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டதன் பின்னர் கொள்ளுப்பிட்டியவில் உள்ள கங்காராம விகாரையில் விசேட மத வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் ,

**கேள்வி :** பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளதா?

**பதில் :** பாராளுமன்றம் கூடும்போது பார்த்துக் கொள்ளுங்கள்.

**கேள்வி :** நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு உங்களிடமுள்ள வேலைத்திட்டங்கள் என்ன?

**பதில் :** பொருளாதாரத்தை நிச்சயம் கட்டியெழுப்ப வேண்டும். காரணம் மக்கள் மிகுந்த நெருக்கடியுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எதிர்வரும் சில மாதங்களில் இதனைவிட பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். எவ்வாறிருப்பினும் நாம் அதிலிருந்து மீளவேண்டும். அவ்வாறு மீளெழுவதற்காகவே நான் பதவியேற்றிருக்கின்றேன்.

எவ்வாறிருப்பினும் எமக்கு இதனை தனியாக செய்ய முடியாது. ஏனைய நாடுகளிடமிருந்தும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தும் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மீண்டும் மூன்று வேளையும் உணவு உண்ணும் இனமாக வேண்டும். ரூபாயிற்கென பெறுமதி இருக்க வேண்டும். இளைஞர்களுக்கு எதிர்காலமொன்று வேண்டும்.

**கேள்வி :** நாளை (இன்று) அமைச்சரவை நியமிக்கப்படுமா?

**பதில் :** இல்லை. நாளை இடம்பெறாது.

**கேள்வி :** போராட்டத்திற்கு என்ன ஆகும்?

**பதில் :** "கோட்டா கோ கம" மீது கைவைக்க மாட்டோம். அதனை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். பொலிஸாரும் அதனை செய்ய மாட்டார்கள்.

**கேள்வி :** "ரணில் கோ கம" உருவாக்கப்படும் என்று கூறப்படுகிறதே?

**பதில் :** என்னுடைய வீட்டு வளாகத்தில் நின்று [illegible] ஹோம்" என்று [illegible] ருந்து கொண்டு எங்கு செல்வது என்று திகைத்துவிட்டேன்.

**கேள்வி :** எவ்வாறு பெரும்பான்மையை நிரூபிப்பீர்கள் ?

**பதில் :** எனக்கு பெரும்பான்மை இருக்கிறது. நான் உங்களிடம் கேட்கின்றேன் (ஊடகவியலாளரிடம்) நாட்டு மக்களின் துன்பத்திற்கு தீர்வு வேண்டுமா? இல்லையா? குறுகிய அரசியலில் ஈடுபடுவதற்காக மூன்று வேளையும் உண்பதற்கு இல்லை என்றாலும் சரியென்றா கூறுகின்றீர்கள்? எரிபொருள் உள்ளிட்ட அனைத்தையும் நான் பெற்றுக்கொடுப்பேன். பாராளுமன்றத்தில் அனைவரதும் ஒத்துழைப்புடன் இதனை செய்து காண்பிப்பேன் என்றார்.

மேலும் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினையை உடனடியாக தீர்க்க புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக உறுதியளித்துள்ளார்.

பிரதமராக பதவியேற்றதில் இருந்து, எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதே அவரது முதன்மையான பணியாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

அதற்கமைய எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியா மற்றும் பல நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளேன் என்றார்.

அதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண மேற்குலக நாடுகளின் ஆதரவை பெற்றுக் கொள்ளும் பேச்சுவார்த்தைகளும் விரைவில் இடம்பெறவுள்ளன என்றார். (ம)

## கோட்டாவின்...

அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

"அரச தலைவர் முற்றாக சட்டபூர்வமான தன்மையை இழந்துவிட்டார், மக்கள் அவர் வீட்டிற்கு செல்ல வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர். மேலும் அவர் மீது அதிருப்தியை வெளிப்படுத்தும் பிரேரணைக்கு பாராளுமன்றம் விரைவில் வாக்களிக்கவுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆரம்பத்திலிருந்தே தற்போதைய பாராளுமன்றத்தில் சட்டபூர்வத்தன்மை இல்லை. அவர் தனது தொகுதியில்கூட வெற்றி பெறவில்லை என தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அளித்த செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார். (ம)

## சவாலான...

விக்கிரமசிங்கவிற்கு எனது வாழ்த் தினைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மீண்டும் உறுதியான இலங்கையை கட்டியெழுப்புவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளேன் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம)

## அமைச்சரவை...

இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பதற்கும் ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவர் என்ற வகையில் பிரதமர் பதவியை ஏற்கவும் தான் தயாராக உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் நேற்று ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதன்படி, இந்த கடிதத்துக்கு பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி இவ்வாறு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதில், ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிப்பதற்கான தீர்மானத்தை மாற்ற முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போது நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பது நாட்டுக்கான நலனாக அமையும் எனவும், எதிர்காலத்தில் நியமிக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையில் ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த எவரேனும் இணைத்துக் கொள்ள வேண்டுமாயின் உடனடியாக தமக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நாடு பாரிய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இவ்வேளையில் புதிய அமைச்சரவை நியமனத்தை ஒத்திவைக்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவரின் துரிதமான பதிலை பாராட்டுவதாகவும் ஜனாதிபதியின் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பதவிக்கு ரணில் நியமனம் அரசியமைப்பிற்கு எதிரானது

## கலாநிதி ஓமல்பே சோபித தேரர்



(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவிக்கு நியமிக்கும் முறைமை தவறானது எனவும் அரசியலமைப்பிற்கு எதிரானது எனவும் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

பிரதமராக நியமிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவிற்கு எவ்வித அருகதையும் இல்லை எனவும் மக்கள் கேட்பதற்கு மாறான ஒன்று வழங்கப்படுவதாகவும் ஓமல்பே சோபித தேரர் குறிப்பிட்டார்.

தேர்தல் மூலம் தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்க மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் தலைவர் அல்ல எனவும் இந்த நியமனம் வேறு நோக்கங்களுக்காக இடம்பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ராஜபக்சக்களின் பாதுகாப்பிற்காக, அவர்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையாகவே இதனை தாம் பார்ப்பதாகவும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெறுவதற்காக ஏனைய கட்சிகளை சேர்ந்தவர்களுக்கு அழுத்தம் விடுத்து, இலஞ்சம் வழங்கி அவர்களது ஆதரவையும் பெற்றுக்கொண்டு, வெறுமனே ஒருவருக்கு மாத்திரம் அதிகாரம் முழுவதையும் வழங்குவது சட்டவிரோத செயல் எனவும் ஓமல்பே சோபித தேரர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கடும் குற்றத்தை புரிகின்றார். ஆகவே, நாட்டு மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து செயற்படுமாறு ஜனாதிபதியிடம் நாம் கோரிக்கை விடுக்கின்றோம். இந்த தருணத்தில் இத்தகைய செயற்பாடுகள் ஊடாக மக்கள் எழுச்சிப் போராட்டத்தை பாரதூரமான நிலைக்கு கொண்டு செல்ல வேண்டாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நியமனத்தை ஏற்றுக்கொள்ள பொதுமக்கள் தயாரில்லை. எனவே, நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு செவிசாய்த்து இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அரசியலமைப்பின் பிரகாரம் செயற்படுமாறும் நாம் கோருகின்றோம். சர்வமத தலைவர்களின் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்து தீர்மானம் எடுக்குமாறும் நாம் ஜனாதிபதியிடம் கோருகின்றோம் என தேரர் மேலும் கூறினார். கொழும்பு பேராயருடன் கொழும்பில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இதனை கூறினார். (ம)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 15 பரப்புக்காணி
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

- A9 வீதியில் இருந்து 150m தூரம்
- லேடன் கொம்பனி பின்புறம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரம்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- நல்ல சூழல்
- 20 அடிப் பாதையுடன்

முன்பகுதியாக உள்ள காணி
**1 பரப்பு - 7 இலட்சம்**

பின்பகுதியாக உள்ள காணி
**1 பரப்பு - 5 இலட்சம்**

(11344)

**074 043 6673**


# ஜனநாயக முறையில் அமையும் அரசுடன் இணைந்து செயற்படுவோம்

## ரணிலின் நியமனம் குறித்து இந்தியா


India in Sri Lanka
@IndiainSL

High Commission of India hopes for political stability and looks forward to working with the Government of Sri Lanka formed in accordance with democratic processes pursuant to the swearing in of Hon'ble @RW_UNP as the Prime Minister of #SriLanka. (1/2)

7:35 PM · May 12, 2022 · Twitter for Android

35 Retweets 1 Quote Tweet 57 Likes

(கொழும்பு)

ஜனநாயக முறையில் அமையும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம் என இந்தியா தெரிவித்துள்ளது.

நாட்டின் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

அதன் உத்தியோகப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"அரசியல் உறுதிப்பாட்டை எதிர்பார்ப்பதுடன், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டிருக்கும் நிலையில், ஜனநாயக முறைக்கு அமைவாக ஸ்தாபிக்கப்படும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# மரண அறிவித்தல்



## திருமதி யாழினிதேவி அருட்குமரன்

**( மண்டைதீவு )**

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி யாழினிதேவி அருட்குமரன் (மதி) நேற்று 12.05.2022 (வியாழக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமானந்தம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - பரஞ்சோதி தம்பதிகளின் அன்பு மருமகளும் அருட்குமரனின் அன்பு மனைவியும் சிவகுமாரதாஸ், அருளினி, தனுசன், பரமகம்சர், பவித்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும் விகர்னா, சயந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி, சுசிலாதேவி மற்றும் வனிதாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம், ஆனந்தன் மற்றும் தயாநிதி, உதயகுமார் - சிவகாமி, காலஞ்சென்ற சிவகுமார், சுந்திரகுமார் - ரஜிதா ஆகியோரின் மைத்துனியும் கோபிகா, தீபிகா, கிஷாந், ரிஸ்னிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.05.2022) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப 3.30 மணியளவில் மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


(C-4316)

6 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

தகவல் :-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 14 - 08 - 1939



இறப்பு 12 - 05 - 2022

## மயிலங்கூடலூர் பி. நடராஜன்

**( ஓய்வுபெற்ற ஆசிரியர், எழுத்தாளர் )**

மயிலங்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பிள்ளையினார் நடராஜன் நேற்று 12.05.2022 (வியாழக்கிழமை) காலமானார்.

அன்னார் பிள்ளையினார் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் திருச்செந்தூரனின் தந்தையும் சுந்தரம்பிள்ளை - வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் கதிர்காமத்தம்பி , வேலாயுதபிள்ளை, பரிபூரணம், விசாலாட்சி அம்மா, செல்லம், மணி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.05.2022) வெள்ளிக்கிழமை நாயன்மார்கட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.314, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.

(11353)

தகவல் :
விமலாதேவி நடராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.